**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.65/2022**
**Prosecution witness : அ.சா.1 Date : 19.05.2023**

| | |
|---|---|
| **Name : கோவிந்தராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,4,5 present. A3, A2 absent. Filed petition u/s 317 crpc and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பெட்டனேரில் குடியிருந்து விவசாயம் செய்கிறேன். நான் JSW ல் கான்ராக்ட் எடுத்து வேலை செய்து வருகிறேன். நான் பெருமாள் என்பவரிடம் இருந்த சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பாக, பெரியாண்டிச்சி கோவில் அருகே நிலம் வாங்கியிருந்தேன். அந்த இடத்தில் எனது கட்டிடம் உள்ளது. அந்த கட்டிடத்தில் Gokul Garments என்ற பெயரில் கம்பெனி வைத்திருந்தேன்.

2) பெரியண்டிச்சி கோவிலில் பண்டிகை நடந்தது, அந்த சமயத்தில் அந்த இடத்தை பொங்கல் வைத்து கொள்வதற்காக என்னிடம் கேட்டார்கள் நான் கொடுத்தேன். அந்த இடம் சம்மந்தமாக ஏற்கனவே சிவில் வழக்கு ஒன்று சார்பு நீதிமன்றம் வழக்கு நடந்து வந்தது, அந்த வழக்கில் எனக்கு சார்பாக தீர்பாகிவிட்டது.

3) கடந்த 21.05.2021-ம் தேதி மாலை 5 மணிக்கு கம்பெனிக்கு அருகே உள்ள கோவிலில் பண்டிகை நடந்தது சம்மந்தமாக நிலம் கேட்டு, நான் கொடுத்திருந்தேன். எதிரிகள் 5 பேரும் வந்து என்னிடம் தகராறு செய்தார்கள். நீதிமன்ற தீர்ப்பு எனக்கு சாதகமாக வந்தாலும் நிலத்தை அனுபவிக்க விடமாட்டோம் என்றார்கள்.

4) எதிரிகள் அனைவரும் என்னை கண்டார ஓலி என்று கெட்டவார்த்தையால் திட்டி, நிலத்தில் வைத்து பேசினார்கள் பிறகு என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று

மிரட்டினார்கள். கோதுமணி என்பவர் என்னை உருட்டுகட்டையால் என் இடது கை மோதிரவிரலில் அடித்து காயம் ஏற்படுத்தினார்.

5) நேசமணி என்பவர் கத்தியால் இடது முழங்கையில் வெட்டி கீறல் போட்டு காயம ஏற்படுத்தினர். பினனால் முதுகில் அடித்தார்கள். அடிப்பட்ட என்னை எனது நண்பர் முத்து என்பவர் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்ந்தார். அங்கு 1 வாரம் சிகிச்சையில் இருந்தேன். மேச்சேரி காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் எனக்க அடையாளம் தெரியும். ஆஜரில் போது, நேசமணி, மகேந்திரன் ஆகியோர் உள்ளனர். மற்றநபர்கள் ஆஜரில் இல்லை.

6) எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

7) சொத்து வாங்கியதாக சொல்லும் போது, அதை விற்றவர் எதிரிகளின் சொந்த சித்தப்பா என்றால் சரிதான். பிரச்சனைக்குரிய நிலத்தில் பட்டா, சிட்டா, அடங்கல், என்னுடைய பெயரில் உள்ளதா என்றால் இல்லை. சார்பு நீதிமன்றத்தில் சொத்தில பாகப்பிரிவினை கேட்டுதான் எதிரிகள் அவருடைய சித்தப்பா பெருமாள் மீதும் என் மீதும் வழக்கு போட்டிருந்தாகள் என்றால் சரிதான்.

8) பாகப்பிரிவினை வழக்கில் பாகம் இல்லை என்று தீர்பாகி அதன் மீது மேல் முறையீடு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. சொத்து எனக்கு பாத்தியம் என்று தீர்ப்பாகவில்லை என்றால் சரிதான். சண்டை நடந்த தேதி என்று என்றால் 21.02.2019 ஆகும். தீர்ப்பு சொல்லி 5 நாளில் பிரச்சனை நடந்தது என்றால் சரிதான.

9) அந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் கார்மெண்ட்ஸ் நடக்க வில்லை என்று சாட்சியம் அளித்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் கொடுத்த பெருமாளுக்கு

வாரிசு இல்லை என்றால் சரிதான். பெருமாளின் சொந்த சகோதரின் மகன்கள் தான் ஆஜர் எதிரிகள் என்றால் சரிதான்.

10) கட்டிடம் கட்டி அதில் சட்டவிரோதமாக செயல்கள் செய்ததாக என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. அடிக்கடி சட்டவிரோமாக செயல்கள் நடப்பது சம்மந்மாக காவல் நிலையம் செல்லவதால் காவலர்களை சரிகட்டி இந்த பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் இல்லை. மருத்துவமனை வரும் வழியில் இரு காவல் நிலையம் உள்ளது என்றால சரிதான். அதில நான் புகார் கொடுக்கவில்லை என்றால நான் சிகிச்சைக்கு வந்ததால் புகார் கொடுக்கவில்லை.

11) முத்து என்பவர் எனக்கு அக்கா மருமகன் ஆவார். சம்பவம் குறித்து கோவில் நிர்வாகிகள் என்னை தடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் முயற்சி செய்யவில்லை அவர்கள் கோவிலை பார்த்துகொண்டிருந்ததால் வரவில்லை. பொதுமக்கள் யாரும் அந்தஇடத்தில் இல்லை என்றால் சரிதான்.

12) மருத்துவமனை சேர்ந்தபின்பு எத்தனை நாள் கழித்து புகார் கொடுத்தீர்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. அதன்பின்னிட்டு எத்தனை நாள் கழித்து போலிசார் விசாரித்தனர் என்றால் 1 வாரம் கழித்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் 21.02.2021 ல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

13) எனது அரசியல் செல்வாக்கு பயன்படுத்தி பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.65/2022**
**Prosecution witness : அ.சா.2 Date : 19.05.2023**

| | |
|---|---|
| **Name : ராஜேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,4,5 present. A3, A2 absent. Filed petition u/s 317 crpc and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பெட்டனேரில் குடியிருந்து night watchman ஆக வேலை செய்கிறேன். அ.சா.1 நிலம் வாங்கியது சம்மந்தமாக எனக்கு தெரியயும். அ.சா.1 பெருமாள் என்பவரிடம் இருந்த சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக, பெரியாண்டிச்சி கோவிலுக்கு வடக்கு பக்கம் நிலம் வாங்கியிந்தார். அந்த இடம் காலி இடமாகும்.

2) பெரியண்டிச்சி கோவிலில் பண்டிகை நடந்தது, அந்த சமயத்தில் அந்த இடத்தை பொங்கல் வைத்து கொள்வதற்காக அவரிடம் கேட்டு இடத்தை சுத்தம் செய்யும் போது பிரச்சனை ஏற்பட்டது.

3) கடந்த 21.02.2021-ம் தேதி மாலை 5 மணிக்கு எதிரிகள் 5 பேரும் வந்து அ.சா.1 யிடம் தகறாறு செய்தார்கள். அ.சா.1 யிடம் நீதிமன்ற தீர்ப்பு வந்தாலும் நிலத்தை அனுபவிக்க விடமாட்டோம் என்றார்கள். மேல்முறையீடு செல்வதாக சொன்னார்கள்.

4) எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ கண்டார ஒலி , தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் கோவிலுக்கு வடக்கு புறத்தில் வைத்து திட்டினார்கள். பிறகு அ.சா.1 ஐ கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். கோதுமணி என்பவர் அ.சா.1 ஐ கட்டையால் அவரது கையில் அடித்தபோது, அ.சா.1 கையை தூக்கினார். அப்போது அவருக்கு இடது கை மோதிரவிரலில் அடித்து காயம் ஏற்பட்டது.

5) நேசமணி என்பவர் கம்பியால் அ.சா.1 ஐ  முதுகில் அடித்தார்கள்.  அடிப்பட்ட அ.சா.1 ஐ மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தார்கள். நான் கோவிலின் அருகில் நின்று சம்பவத்தை பார்த்தேன்.  எதிரிகள் எனக்க அடையாளம் தெரியும்.  ஆஜரில் போது, நேசமணி, மகேந்திரன் ஆகியோர் உள்ளனர்.  மற்றநபர்கள் ஆஜரில் இல்லை.

6)  எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

7)  நான் இரவு நேர காவலாளி என்றால் சரிதான்.  மேச்சேரி காவல் நிலையத்தில் என் பெயரில் FIR உள்ளதா என்றால் உள்ளது.  சம்பவ நடந்த தேதியில் நீங்கள் அந்த இடத்தில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் நான் இருந்தேன்.

8) நான் சண்டையை விலக்க வில்லை வேடிக்கைப்பார்த்தேன்.  நிலம் யாருக்கு பாத்தியம் என்பது குறித்து பத்திரம் பார்த்தேனா என்றால் இல்லை.  கிரயம் கொடுத்த பெருமாளுக்கு எதிரிகள் தான் வாரிசு என்றால் சரிதான்..  நிலம் வாங்கிய அ.சா.1 மீது பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளதா என்றால் இல்லை.

9) எனது கல்யாண தேதி தெரியுமா என்றால் தெரியாது.  எனது பிறந்த தேதி 04.04.1995 ஆகும்.  கோவித்தராஜ் வைத்திருக்கும் கார்மென்ட்சில் சட்டவிரோதமான செயல்கள் புகார்தாரர் செய்வதற்க நானும் உடந்தையாக இருந்தேன் என்றும், அதனால் மேச்சேரி காவல் நிலையத்தில் என் பெயரிலும் வழக்கு இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

10) கோவித்தராஜ்வுடன் சேர்ந்த சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதால் சாட்சியாக உங்களை சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல.  எதிரிகள் புகார்தாரை அடித்ததை பார்ப்பதாக சொல்வது பொய் என்றும், போலிசார் சாட்சியாக கோவிந்தராஜுடன் இருப்பதால் உங்களை சாட்சியாக சேர்ந்தள்ளார்கள் என்றால் சரியல்ல.  கோவிந்தராஜ் கேட்டுக்கொண்டதன் பேரில்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.65/2022**
**Prosecution witness : அ.சா.3 Date : 19.05.2023**

| | |
|---|---|
| **Name : கார்த்திகேயன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,4,5 present. A3, A2 absent. Filed petition u/s 317 crpc and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பெட்டனேரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா மகன் ஆவார். அ.சா.1 என்பவர் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக, பெரியாண்டிச்சி கோவிலுக்கு மேலே நிலம் வாங்கியிந்தார். அந்த இடம் காலி இடமாகும்.

2) பெரியண்டிச்சி கோவிலில் பண்டிகை நடந்தது, அந்த சமயத்தில் அந்த இடத்தை சாப்பாடு பரிமாறுவதற்காக தேவைப்படுவதாக சொன்னார்கள் அ.சா.1 அந்த இடத்தை கொடுப்பதாக சொன்னார். கோவில் நிர்வாகத்தினர் இடத்தை சுத்தம் செய்துகொண்டிருந்தனர். எதிரிகள் அ.சா.1 யிடம் பிரச்சனை செய்தார்கள்.

3) கடந்த 21.02.2021-ம் தேதி மாலை 4 மணிக்கு எதிரிகள் 5 பேரும் வந்து அ.சா.1 யிடம் தகறாறு செய்தார்கள். எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் கோவிலுக்கு முன்பாக வைத்து திட்டினார்கள். கோதுமணி என்பவர் அ.சா.1 ஐ கம்பியால் அவரது கையில் அடித்து காயம் ஏற்பட்டது.

5) நேசமணி என்பவர் கட்டையால் அ.சா.1 ஐ தலையில் அடித்தார்கள். அடிப்பட்ட அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தார்கள். நான் கோவிலின் அருகில் நின்று சம்பவத்தை பார்த்தேன். எதிரிகள் எனக்கு அடையாளம் தெரியும். ஆஜரில் போது, நேசமணி, மகேந்திரன் ஆகியோர் உள்ளனர். மற்றநபர்கள் ஆஜரில் இல்லை.

6) எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

7) செத்து விற்றதாக சொல்லப்படும் பெருமாளுக்கு எதிரிகள் தான் வாரிசு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலிசார் உங்களிடம் என்று கையெழுத்து வாங்ககினார்கள் என்றால் 1 வாரம் கழித்து பொட்டனேரியில் கையொப்பம் பெற்றனர். கோவித்தராஜ் வைத்திருக்கும் கார்மென்ட்சில் சட்டவிரோதமான செயல்கள் புகார்தாரர் செய்வதற்கு நானும் உடந்தையாக இருந்தேன் என்றும், அதனால் மேச்சேரி காவல் நிலையத்தில் என் பெயரிலும் வழக்கு இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

8) நீங்கள் போய் சண்டையை தடுத்தீர்களா என்றால் நான் சென்று தடுத்தேன். அ.சா.1 நீங்கள் தடுத்தாக சொல்லவில்லை என்றால் இல்லை நான் சண்டையை தடுத்தேன். எதிரிகள் புகார்தாரை அடித்ததை பார்ப்பதாக சொல்வது பொய் என்றும், போலிசார் சாட்சியாக கோவிந்தராஜுடன் இருப்பதால் உங்களை சாட்சியாக சேர்ந்தள்ளார்கள் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் கேட்டுக்கொண்டதன் பேரில்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.65/2022**
**Prosecution witness : அ.சா.4 Date : 19.05.2023**

| | |
|---|---|
| **Name : சதீஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,4,5 present. A3, A2 absent. Filed petition u/s 317 crpc and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

முதல் விசாரணை

1) நான் பெட்டனேரில் குடியிருந்து வருகிறேன். பூவியாபாரம் செய்கிறேன். சம்பவம் நடந்து 1 வாரம் கழித்து சம்பவம் நடந்த இடத்திற்கு மேச்சேரி போலிசார் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு, சம்பவம் நடந்த இடத்தை வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் இன்னொருவர் சேர்ந்து சாட்சியாக கையெழுத்து போட் டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

2) எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் ஒரு கையெத்து மட்டும் செய்தேன். நான் எழுதிய தாளில் தான் கையெழுத்து செய்தேனா என்றால் எழுதியதாளில் தான் கையெழுத்து செய்தேன். என்னை ஒரு போலிஸ் வந்து விசாரித்தனர். இன்னொரு கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்குதெரியாது.

3) நான் காவல்நிலையம் அடிக்கடி செல்வதால் போலிசார் காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம்வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**